1972 சனவ்ரி 25]

எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்பதை முறையாகக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் நாற்பதாயிரம் ரூபாய் செலவில் இரண்டு நகரங்களில்—திருச்சி, கோயம்புத்தூர்—ஒவ்வொரு மருத்துவ யூனிட் ஏற்படுத்தி மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யவேண்டுமென்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறது.

Mosquito menace in Madras

* 44 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state the details of the steps taken by the Government to arrest the increasing menace of mosquitoes in Madras City?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மலேரியா கொசு ஒழிப்புத் திட்டம் என்பது சென்னை நகரத்திலே முறையாக நிறைவேற்றப் பட்டு வருகிறது. கொசு ஒழிப்புக்கான முன்னேற்பாடுகள் Aromax emulsion is used as an effective larvicide என்ற முறையில் பயன்படுத்தப்படுகிறது. வாராவாரம் கொசுத் தொல்லைகளை ஒழிப்பதற்காக மருந்துகள் குட்டைகளிலும் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களிலும் தெளிக்கப்படுகிறது. மழைகாலங்களில் தண்ணீர் (Storm-water drains) மருந்துகள் தேங்கியுள்ள இடங்களிலே தெளிக்கப்படுகின்றது. கொசு உற்பத்தி தடுக்கப்படுவதற்கு National Malaria Control Unit என்ற திட்டம் சென்னை நகரத்தில் தொடங்கப்படுவதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சார், சட்டசபை விடுதியிலே இந்தக் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சட்டசபை விடுதி இருக்கிற இடமும் மொத்தமாக சென்னை நகரத்தினுடைய பகுதியாகும், கொசுவைப் பொறுத்தவரையிலும். வேண்டுமானால் மற்ற வகைகளில் தனிப் பராமரிப்பு இருக்கும். கூவம் திட்டம் மிக வெற்றிகரமாக நிறைவேற்றப்படுமானால் கொசு ஒழிப்புத் திட்டமும் வெற்றிகரமாக நிறைவேறும் என்று எதிர்பார்க்கிறோம். 12.84 லட்சம் ரூபாய் செலவில் மலேரியா ஒழிப்புத் திட்டம் தீவிர மாக்கப்படவேண்டுமென்று மாநகராட்சி மன்றம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் செலவில் ஒரு பங்கை மத்திய அரசு ஒப்புக்கொண்டால் தமிழக அரசு நிறைவேற்ற ஒப்புக்கொள்ளும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: கொசு ஒழிப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும் கொசுத் தொல்லைகள் அதிகரித்துக் கொண்டிருக் கின்றன என்றுதான் செய்திகள் வருகின்றன. எனவே வேறு சில நாடுகளிலே இருப்பதைப் போன்று பொதுமக்களின்

ஒத்துழைப்பைப்பெற்று தீவிரத் தடுப்பு இயக்கம் நடத்த அரசாங்கம் ஆலோசனைசெய்துள்ளதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிப்பட்ட கடமைகளைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்காக மலேரியாத் தடுப்பு வாரம் நடத்தப்படுகிறது. இதைத்தவிர ஃபிலேரியா யூனிட்டுகள் எட்டு இடங்களில் சென்ற ஆண்டு அமைக்கப்பட்டன. இந்த ஆண்டும் அமைக்கப்பட்டு பொதுமக்கள் உணரத் தக்க வகையிலே நிகழ்ச்சிகள் நடத்துகிறோம். மிகப் பெரிய அளவிலே இதைச் செய்யவேண்டுமென்பது எதிர்காலத்திலே ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்று ஆகும்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, நகரங்களிலே கொசுத் தொல்லைகளைக் காட்டிலும் கிராமப்புறங்களிலே கொசுத் தொல்லைகள் மிக அதிகமாக இருக்கின்றன. மலேரியா ஒழிப்புத் திட்டங்கள் கிராமப்புறங்களிலே நடத்தப்படுகின்றன என்றாலும் இன்னும் மத்திய அரசின் ஒத்துழைப்புடன் தீவிரமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யக்கூடிய வகையில் கிராமங்களிலும் இந்தத் திட்டத்தைத் தீவிரப்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மத்திய அரசு உதவக்கூடிய ஒவ்வொரு துறையிலேயும் முழுத் தொகையும் பெற்றுத்தான் மாநில அரசு செய்துவருகிறது. அந்தத் தொகையை நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையிலும் இழந்துவிடவில்லை. அவர்களும் சில அடிப்படைகளை வைத்து ஓரளவுக்கு வழங்கிவருகிறார்கள். எனவே குறிப்பிட்ட வட்டாரங்களில் வட்டாரம் வட்டாரமாக நிறைவேற்றி வருகிறோம். ஏற்கனவே ஒருமுறை மலேரியா ஒழிப்புத் திட்டம் பல இடங்களில் நிறைவேற்றப்பட்டு அப்படிப் பட்ட பகுதிகள் எல்லாம் இப்பொழுது மெயின்டனன்ஸ் ஸ்டேஜ்க்கு வந்திருக்கின்றன. மறுபடியும் தீவிர ஒழிப்புத் திட்டம் எல்லா இடங்களிலும் செயல்படுத்தப்படவேண்டுமானால் அதற்கு இந்திய அரசினுடைய பொருளாதார நிலையும் தமிழக அரசினுடைய பொருளாதார நிலையும் இடம்தரக்கூடிய ஒன்றல்ல.

கும்மிடிப்பூண்டியிலுள்ள இயங்கும் மருத்துவமனை

* 45 வினா—திரு. ரா. ரா. முனுசாமி :

டாக்டர் திரு. எச. வி. ஹாண்டே :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டு மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் செயல்படுகிற இயலூர்தி மருத்துவமனை மூடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட இயங்கும் மருத்துவமனை கும்மிடிப்பூண்டியில் 8—1—1971 முதல் 31—8—1971